R 5319 (page 292)

# பரிசுத்தமாக்குதலின் இரண்டு பகுதிகள்

## THE TWO PARTS TO SANCTIFICATION

"உமது சத்தியத்தினால் அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."- யோவான் 17:17

பரிசுத்த யோவான் எழுதிய சுவிசேஷத்தில் 17 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஜெபமானது நமது கர்த்தரின் நினைவுகூருதலின் இராப்போஜனத்திலிருந்து கெத்செமனே தோட்டத்திற்கு செல்லும் வழியில் ஏறெடுத்ததாகும். இந்த ஜெபமானது அப்போஸ்தலருக்கும் கர்த்தரின் வசனத்தினால் அவரது சீஷர்கள் அல்லது பின்னடியார்களானவர்களுக்கும் ஏறெடுக்கப்பட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

பரிசுத்தமாக்கு என்ற வார்த்தை பிரித்துவை, புனிதப்படுத்து என்பதை குறிப்பிடுகிறது. பரிசுத்தமாக்குதல் என்ற இந்த வேலையில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. முதலாவது ஆரம்பத்தில் நாம் செய்வது என்னவென்றால், தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதன்படி செய்யும் விருப்பத்துடன் நம்மை நாமே பிரித்துக்கொள்வது. அதன் இரண்டாவது பகுதி படிப்படியாக வருவதாகும். அதாவது நாம் இதற்குமுன் அறிந்திராத போதனைகளும் அறிவுறுத்தல்களும் மற்றும் நாம் இதற்கு முன் அங்கீகரித்திராத சில நீதியின் கொள்கைகள். இதுதான் ஆழமாக பிரித்து வைத்தல். இது பிதாவானவரின் ஏற்பாட்டின்படி தேவனால் செய்யப்படுகிறது.

பரிசுத்தமாக்குதல் என்பதின் ஆழமான பொருள் வசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நமது கர்த்தர் இந்த வேலையை செய்யும்படி பிதாவானவரிடம் ஜெபிக்கிறார். இயேசுவை பின்பற்றி நடக்க சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டிருந்தார்கள். அவர்கள் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அதாவது பிதாவானவரின் சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய விருப்பங் கொண்டிருந்தார்கள். "எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறபடி நமது கர்த்தர் தெய்வீக அறிவுறுத்தலின் வேலை அவர்களில் நடைபெற வேண்டும் என்று ஜெபித்தார். சீஷர்களின் தெய்வீக கிருபையின் அறிவுறுத்தலுக்கு வரவேண்டும் என்று ஆண்டவர் விரும்பினார். அது தேவனுடைய வசனத்தின் மூலம் வரும் என்று குறிப்பிட்டார்.

நாம் இப்பொழுது பெற்றிருக்கிறது போல, அந்த சமயத்தில் வசனங்களிடங்கிய வேதாகமம் இல்லை. ஏனெனில் புதிய ஏற்பாடு அப்பொழுது எழுதப்படவில்லை. எனினும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சத்தியம் தேவனுடைய முழு சத்தியமும் அல்ல, ஒரு பகுதி மட்டுமே. நமது கர்த்தர் ஜெபித்தது, அவரது சீஷர்கள் பொதுவான சத்தியத்தின் ஒரு பகுதியை மாத்திரம் பெற வேண்டும் என்பதற்காக அல்ல, அவர்கள் தெய்வீக திட்டம் மற்றும் நோக்கத்தின் அறிவை பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஏறக்குறைய சத்தியமானது வந்து கொண்டிருக்கலாம். அது அவனது மனதை விழித்தெழச் செய்யும். அது வேதியியலைப் பற்றிய சத்தியமாக இருக்கலாம் அல்லது மற்ற விஞ்ஞான அறிவைப்பற்றி இருக்கலாம். புவியியல் பற்றிய சத்தியமாகவோ, சூரியன் முதலானவைகளைப் பற்றிய சத்தியமாகவோ

இருக்கும். அது அவனது மனதில் செல்வாக்கு செலுத்தி, விழுந்துபோன நிலையிலிருந்து சிறிதளவு உயர்த்தும். ஆனால் நமது கர்த்தர் குறிப்பிடுகிற சத்தியம் இவைகளல்ல. பூமியின்

R5320 : page 293

நிறை அல்லது நட்சத்திரங்களுக்கு இடையேயான தூரம் போன்ற அறிவைக் காட்டிலும் மிகவும் அவசியமானவை.

பொதுவாக உலகத்திற்கு வரும் பல்வேறு சத்தியங்களும் அவர்களை சிந்திக்கும்படி வழிநடத்தி, முடிவாக அவர்களுக்கு ஒரு இரட்சகரை தயார்படுத்த வேண்டிய அவசியத்தை குறிப்பிடுகிறது. இது பிற்காலத்தில் தேவனால் இழுக்கப்படுவதை மாத்திரமல்ல, அவர்கள் தங்களை பிரித்துவைப்பதையும் செய்யும். ஏறக்குறைய இந்த பொதுவான சத்தியம் தெளிவாக இருந்து, தனிப்பட்டவர்களை உண்மையான பள்ளிக்கு கொண்டு வரும். இதை நாம் தயார்படுத்தும் மார்க்கம் (படிப்பு) என்று கூறலாம். கிறிஸ்துவின் பள்ளியில் உண்மையான படிப்புக்கு முன்னதாக இப்படிப்பட்ட தயார்படுத்தும் மார்க்கம் இருக்க வேண்டும்.

## பரிசுத்தமாக்குதலின் முதல் பகுதி

உண்மையான பரிசுத்தப்படுத்துதல் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ஒரு பரிசுத்தப்படுத்துதல் நடைபெறுகிறது. கர்த்தர் இஸ்ரயேல் ஜனங்களிடம் கூறுகிறதாவது: “நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள். நான் உங்களை பரிசுத்தப்படுத்துவேன்.” இது ஒரு நம்பிக்கையினால் தங்களை பிரித்து வைத்துக்கொள்ளுதல் ஆகும். ஆனால் ஒருவர் தன்னை பரிசுத்தப்படுத்தி பிரித்துக்கொள்ளும் என்பது ஒன்று, தேவன் அவனை பரிசுத்தப்படுத்துதல் என்பது மற்றொன்று. இந்த யுகத்தின் அழைப்பைப் பொறுத்தவரை குமாரனாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்; பிதாவானவர் ஒருவனை தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளாவிட்டால் ஒருவனும் குமாரனிடத்தில் வரமாட்டான்.

முதலாவது சுபாவ சிந்தை மூலமாக பிதாவானவருடைய இழுத்துக் கொள்ளுதல் வருகிறது. சிருஷ்டிகரை அறிந்துகொள்ளுகிற விருப்பமாகிய இயற்கையான இழுத்துக்கொள்ளுதலுடன் மனிதனுடைய மூளை அமைக்கப்பட்டுள்ளது. தேவனை அறிந்தேயிராத, வேதாகமத்தை பெற்றிராத புறஜாதிகளிடத்தில் இதை நாம் காண்கிறோம். இந்த ஜனங்கள் ஒரு இயற்கையான சாய்வை அல்லது தேவனை ஆராதிக்கக்கூடிய விருப்பத்தை பெற்றிருக்கிறார்கள். ஆதாமின் விழுகையினால் அதிகமாக நெறிதவறிபோயிராத மூளையின் இந்த சுபாவத்தை பெற்றிருப்பவர்கள் கர்த்தரின் கிருபையினால் சத்தியத்திற்கும், வெளிச்சத்திற்கும் வழிநடத்தப்படுகிறார்கள். ஒருவேளை அவர்கள் இயேசுவை ஒரு கீர்த்தனை அல்லது ஒரு கைப்பிரதி அல்லது ஒரு புத்தகம் மூலமாக அறிந்திருக்கலாம்.

இந்த இயற்கையான இழுத்தலினால், தேவனை ஏற்றுக்கொள்ளுவதற்கான விருப்பம் முதலாவது படியாகும். அவர்கள் வழியில் நுழைய வரும் போது, அது இடுக்கமானதாக, கஷ்டமானதாக அதன் “வாசல்” தாழ்வானதாக இருப்பதை கற்றுக்கொள்ளுகிறார்கள். அநேகர் நிச்சயமாக திரும்பிச் செல்கிறார்கள். எல்லோரையும் தேவன் தேடவில்லை. மிகவும் ஒரு விசேஷித்த வகுப்பாரை அவர் தேடிக்கொண்டிருக்கிறார். ஆகையால் வழியின் இடுக்கத்தினாலும் வாசல் தாழ்வாக இருப்பதினாலும் ஊக்கம் இழந்தவர்களை அவர் தேடுவதில்லை. இப்படிப்பட்டவர்களை திரும்பிப் போகப்பண்ணவே இந்த நிலைமைகள் இப்படியாக ஆக்கப்பட்டன.

வழியின் இடுக்கத்தினாலும் வாசல் தாழ்வாக இருப்பதினால் பின்வாங்கிப் போனவர்களுக்கு நித்திய ஆக்கினையே கிடைக்கும் என்று முன்னாளில் நாம் நினைத்தோம். இப்பொழுது நல்ல கிரியை செய்யக்கூடிய அவரது சித்தத்தை செய்ய நாடுகிற ஒரு விசேஷித்த வகுப்பாரை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார் என்பதைக் காண்கிறோம். தேவையான அளவு வைராக்கியத்தை வெளிப்படுத்தாதவர்கள் தொடர்ந்து செல்ல முயற்சித்தால் ஒரு வேளை காயப்படுவார்கள். ஆகையால் கர்த்தர் கூறுகிறதாவது: 'என்னுடைய சீஷர்களாக முடிவு செய்வதற்கு முன்னரே நிபந்தனைகளைக் கவனித்து, செல்லும் செலவை கணக்கு பார்த்து, காரியத்தின் கனத்தைப் பார்க்க வேண்டும். பிறகு எனது சீஷனாக நீ தீர்மானித்தால், என்னைப் பின்பற்றி வா?'

ஒருவன் கர்த்தருடைய சீஷன் ஆன பிறகு, அவன் நமது தலைப்பு வசனத்தில் அவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பாரின் நிபந்தனைக்குள் வருகிறான். இந்த வகுப்பில் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், பரிசுத்த பவுல் குறிப்பிடுகிற வேறு ஐந்நூறு சகோதரர்களும் மற்றும் விசுவாசமுள்ள இருதயத்துடனும் உண்மையுடனும் நமது கர்த்தரை ஏற்றுக்கொண்டிருக்கிற சுவிசேஷ யுகத்திலுள்ள அனைவரும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அனைவருக்கும் இந்த ஜெபம் பொருந்தும்; "உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்!"

பாதையின் முடிவு என்று நாம் நினைத்திருந்த இது அதன் ஆரம்பமாக இருக்கிறது என்று சொல்வது விநோதமாக இருக்கிறது. நாம் செய்ய வேண்டியது எல்லாம் இயேசுவை ஏற்றுக்கொள்ளுவதுதான் என்பது முன்னாளில் நமது எண்ணமாக இருந்தது. நமது நண்பர்கள் கூறினதாவது: இயேசுவை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; 'நீங்கள் அவரை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். எல்லாம் அவ்வளவு தான். இப்பொழுது இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.'

ஆனால் நாம் சத்தியத்தை அறிய வந்தபிறகு, நாம் இன்னும் அதிகமாக தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமாயிருக்கிறது. ஒருவர் தனது சிந்தனையை பின்னுக்கு தள்ளி, முதலில் எந்த அளவுக்கு அவர் சத்தியத்தை அறிந்திருந்தார் என்பதை நினைத்துப் பார்த்தால், தான் ஒரு பாவி என்பதையும், தான் கிறிஸ்துவிடம் சென்றால் பிதாவானவர் தன்னை பிரித்து வைப்பார் என்பதையும் அறிந்திருந்ததை தெளிவாக உணர்ந்து கொள்ளுவார். இதைத்தான் பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். "நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்." (எபேசியர் 2:10) முன்னரே குறிப்பிட்டது போல இந்த பிரித்து வைத்தல் பிதாவனவரால் அவரது சத்தியத்தின் மூலம் செய்யப்படுகிறது.

## பரிசுத்தப்படுத்துகிற சத்தியம்

பரிசுத்தபடுத்தும் இந்த சத்தியம் பொதுவான அறிவின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கப்படுகிறதில்லை. ஏனெனில் இந்த சத்தியம் உலகத்திற்கானதல்ல, அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. அது அர்ப்பணம் செய்தவர்களுக்கானது, தேவனுடைய பிள்ளைகளானவர்களுக்கானது. தேவன் தம் குடும்பத்திற்கு கொடுக்கக்கூடிய ஒருவகையான சத்தியம். தேவன் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை கிறிஸ்து மூலம் நம்மிடத்தில் காண்பிக்கும்படியாக தம்முடைய தீர்மானத்தின்படி நம்மை அழைத்திருக்கிறார். (எபேசியர் 2:7) தேவன் ஒரு தீர்மானம் வைத்திருக்கிறார். அது வரும் யுகங்களில் அவரது மகா திட்டத்தின் கூடுதலான அபிவிருத்தியை முழுவதும் விளங்கச் செய்யும்.

ஒரு விசேஷித்த வகுப்பாரை அழைத்து, தெரிந்து கொண்ட பொழுது தேவன் ஒரு விசேஷித்த தீர்மானத்தை வைத்திருந்தார். பரிசுத்தப்படுத்தம் வேலையை செய்கிற விசேஷித்த சத்தியமானது அவரது யுகங்களின் மகா திட்டத்தின் சத்தியமாக இருக்கிறது. அவர் இவையனைத்தையும் உடனே அறியச் செய்யவில்லை. அவரது திட்டத்தில் வெளிப்படுத்தல் நூற்றாண்டு காலமாக போய்க் கொண்டிருக்கிறது. இந்த வெளிப்படுத்தலில் சில தீர்க்கதரிசிகள் மூலமாகவும், சில இயேசு மூலமாகவும் சில அப்போஸ்தலர் மூலமாகவும் வந்திருக்கின்றன. இந்த வெளிப்படுத்தல்கள் பரிசுத்தமாக்குதலுக்கான பரலோக ஏற்பாடாக இருக்கிறது.

எனினும் நாம் பெற்றிருக்கிற திட்டம் மற்றும் திட்டத்திற்கு மேலான இன்னும் சில காரியம் கூட தேவைப்படுகிறது. இந்த சத்தியம் பரிசுத்தமாக்குதலின் வழியாக இருந்தால் கூட, பல்வேறு மற்ற காரியங்களும் கவனிக்கப்பட வேண்டும். "உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தப்படுத்தும், உமது வசனமே சத்தியம்." உதாரணத்திற்கு ஒருத்தி ஒரு குழந்தையை பராமரிக்கிறாள் என்றால், அவள் அதற்கு தேவையான உணவு, சுத்தமான காற்று, உடற்பயிற்சி முதலானவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். இதே போல தேவனுடைய பிள்ளைகளோடும் கூட இருக்கிறது. அவர்களது கவனத்திற்கு ஏற்ப சத்தியமானது படிப்படியாக திறக்கப்படுகிறது. நமது அறிவுகள் பயிற்சியடைவதற்கு பிதாவானவர் நம்மை பல்வேறு அனுபவங்களில் வழி நடத்துகிறார். நமது அனுபவங்கள் மற்றும் பராமரிப்புகளும் நம்மை சிந்திக்கவும், சரியாக பகுத்துணரவும், ஆராயவும், விசாரிக்கவும் செய்கிறது. நாம் இப்படி செய்வதால், இந்த அனுபவங்கள் மற்றும் பராமரிப்புகளினால் நாம் அபிவிருத்தி அடைகிறோம். இந்த அனுபவங்கள் எதை அர்த்தப்படுத்துகிறது?அது எதை போதிக்கிறது? என்பதை கவனிக்க நாம் வழிநடத்தப்படுகிறோம்.

தேவனுடைய வசனமே நமது அறிவுறுத்தல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது. இது மட்டுமே நமது அறிவுக்கு போதுமானதல்ல. வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்கள் மூலமாக பல்வேற பாடங்கள் இருக்கின்றன. குழந்தைகள் சும்மா சாப்பிடுவது, தூங்குவது மட்டும் தான் செய்கின்றன. நடக்க தெரியாததால் எங்கேயும் போவதில்லை. அதே போல் தான் தேவனுடைய பிள்ளைகளும்.

## பரிசுத்தமாக்குதலின் இரண்டாம் பகுதி

தேவன் நம்மை ஒருபுதிய அழைப்புக்கு அழைத்திருக்கிறார். நாம் ஒரு புதிய சுபாவத்தை பெற வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்முடையது பூமிக்குரிய சுபாவம் அல்ல. நமது அழைப்பின் உண்மையான குறிக்கோள் மற்றும் நோக்கம், மனிதர்களுக்கும், தேவதூதர்களுக்கும் மேலான அவரது புதுசிருஷ்டியாக நம்மை தகுதிப்படுத்தவும் உருவேற்படுத்தவும் ஆகும். தேவதூதர்கள் மற்றும் மனிதர்கள் போன்ற சகல சிருஷ்டிகளையும் ஆசீர்வதிக்கவும், மற்றவர்கள் குடியேறப்போகிற மற்ற உலகங்களாகிய தேவனுடைய பிரபஞ்சத்தின் அபிவிருத்திக்காகவும் நாம் தெய்வீக வாய்க்காலாக இருக்கப்போகிறோம். தேவனுடைய திட்டத்தின் நோக்கத்தை நாம் பார்க்கும் பொழுது, நமக்கு ஏன் தேவன் சோதனைகளையும் அனுபவங்களையும் தருகிறார் என்பதற்கான காரணங்களை நாம் காண்கிறோம். நமது கர்த்தராகிய இயேசு ஒரு இரக்கமுள்ள மகா பிரதான ஆசாரியராக இருக்க வேண்டியிருந்தார். அதற்காகவே அவரது சோதனைகளும் அனுபவங்களும் இருந்தன. மந்தைகளின் மேய்ப்பனாகிய நமது கர்த்தராகிய இயேசுவுக்கு துன்பப்படுவது அவசியமாயிருந்ததால். நாம் பூரணப்படுவதற்கு நாம் துன்பப்பட வேண்டியது எவ்வளவு மிகவும் அவசியமாக இருக்கிறது!

நாம் போதனைகள், பாடுகள், துன்பங்களைப் பெற்று நாம் உதவிகளைப் பெற்றால்தான் மற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய அறிந்துகொள்ளுவோம். இப்பொழுது கர்த்தருடைய பிள்ளைகளில் உண்மையாக இருக்கக்கூடியவர்கள் ஆண்டவரின் குணலட்சணத்தில் விசேஷமாக அபிவிருத்தி அடைவார்கள். அவர்கள் மூப்பர்களாகும்படி

**R5320 : page 294**

சலுகை பெற்றவர்கள், இளையவர்கள், சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு போன்ற ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளில் வளரும்படியாக அவர்களை போஷிப்பிக்கவும் போதிக்கவும் நாம் சலுகை பெற்றிருக்கிறோம். ஆகையால் கர்த்தருடைய ஜனங்களில் சட்டாம்பிள்ளையாக நிற்பவர்கள், உண்மைத்தன்மை, விசுவாசம் ஆகியவைகளை வெளிப்படுத்துகிறவர்களாக, செருக்கான ஆவியை அல்ல தாழ்மையான ஆவியை, ஊழியம் செய்யும் ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும்.

பரிசுத்தமாக்குதல் என்பது ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை முழுவதிலும் படிப்படியாக நடக்கக்கூடிய ஒரு வேலையாக இருக்கிறது. இது மரணத்தருவாயில் மட்டுமே பெறக்கூடியதல்ல, ஆனால் அர்ப்பணத்திற்கு பிறகு சீக்கிரத்தில் அடையக்கூடிய ஒன்று. அர்ப்பணமானது கதவைத்திறந்து, நிற்குதலை அவனுக்குத் தருகிறது, அவனுக்கு உறவைத் தருகிறது, தெய்வீக வாக்குத்தத்தின் தாங்குதலையும், ஊக்கத்தையும் அவனுக்குத் தருகிறது, பாதையில் அவனை வைக்கிறது, ஆவியின் கனிகளில் அவனை வளர்க்கிறது. முடிவாக பரலோக மகிமையில் கர்த்தருடன் உடன் சுதந்தரத்தை அடையச் செய்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் இந்த நிற்குதலை பராமரிக்க அன்பு மற்றும் பக்தி போன்ற சான்றுகளுடன் கனிகள் தேவைப்படுகிறது.

அதன்பிறகு, ஊழியத்தில் உண்மைத் தன்மையையும், எந்த அளவுக்கு நெருக்குதலை சகிப்பான் என்பதையும், தப்பறை போதகமாகிய பலமான காற்றை எந்த அளவிற்கு தாங்கி நிலை நிற்பான் என்பதையும், மாம்சம் மற்றும் பிசாசின் தாக்குதல்களை தாங்கி சத்தியத்திருந்து விலகாதிருப்பான் என்பதையும் அறிய சோதனைகள் வரும்.

கர்த்தர் நமது திராணியை அறிவார் என்றும், ஒவ்வொரு சோதனையிலிருந்து தப்பிக்கும்படியான போக்கை ஏற்படுத்துவார் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. நாமனைவரும் சோதிக்கப்படுவோம். அக்கினி கடுமையானதாக இருந்தால், இன்னும் போனால் நம்மை அழித்துவிடும் என்றால் கர்த்தர் அதை தடுத்து விடுவார். காலப்போக்கில் நாம் பலம் அடைவோம். பிறகு அவர் இன்னும் பெரிய சோதனைகளைத் தருவார். ஆகையால், "நீ, உன் கர்த்தராகிய தேவனை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் நேசிக்கிறாயா என்று கர்த்தராகிய உன் தேவன் உன்னை சோதிப்பார்."

## திராணிக்கு ஏற்றவாறு சோதனைகள்

உலோக தாது வல்லுனர் தனது உலோகத்தை சோதித்து நிரூபிக்கிறார். அவர் அதை சோதித்து அதன் கசடுகளை நீக்குகிறார். அவர் அடுத்த இராசாயன இலக்கியை (குடரஓ) பயன்படுத்தி மற்ற அழுக்குகளை நீக்குகிறார். பிறகு மற்ற இலக்கி முதலானவைகளை பயன்படுத்தி சுத்தப்படுத்துகிறார். இதே போலவே கர்த்தர் கசடுகளை நீக்குகிறார். நமது மாம்சத்தின் எல்லா அழுக்குகளையும் நீக்குவதில்லை; ஏனெனில் புது சிருஷ்டி பூரணப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. கசடுகள் நமது சிந்தையில் இருப்பது

**R5321 : page 294**

நமக்கு தெளிவாக தெரிவதால், நாம் புது சிருஷ்டிகளாக அதை நீக்குவதற்கு தேவனிடம்

நாம் அதிகமாக ஒத்துழைப்பு தர வேண்டும்.

ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் அதிகமதிகமாக சத்தியத்தினால் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வசனம் பரிசுத்தப்படுத்துகிறது. பிறகு பரிசுத்தமான, புனிதமான சிந்தனைகளை அனுப்புகிறது. நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் பரிசுத்தப்படுத்தி, எதிர்காலத்தில் தேவனுடைய ஊழியத்திற்கு தகுதியுள்ளவர்களாக்க வேண்டும்.

ஒருவர் அதிகமான சோதனைகளை பெறுகிறார் என்றால் அவரிடம் அதிகமான கசடுகள் இருக்கும் என்பது உண்மையாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. நமது கர்த்தராகிய இயேசு தனது சீஷர்களைக் காட்டிலும் அதிகமான சோதனைகளை பெற்றார். அவர் பூரணராக இருந்தார். இந்த சோதனைகள் நமக்கு "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது"என்று பரிசுத்த பவுல் நமக்கு என்று அறிவிக்கிறார். நமது எதிர்கால பிரகாசம் நாம் இப்பொழுது பெறுகிற இருதய அபிவிருத்தி மற்றும் குணலட்சண அபிவிருத்தியை சார்ந்திருக்கிறது. நமது கர்த்தராகிய இயேசு சோதனைகளில் அதிகமான விசுவாசத்தை காண்பித்ததால் அவர் மிகவும் உயர்ந்த நிலைமையை பெறுவார். கர்த்தரின் சகோதரர்களில் சிலர் தீவிரமான சோதனைகளில் விசுவாசத்தை நிரூபித்ததால் உயர்ந்த நிலைமையை பெறுவார்கள். இந்த சோதனைகளை தற்கால வாழ்க்கையிலும் வரக்கூடிய வாழ்க்கையிலும் நம்மை உயர்ந்த இடத்திற்கு தகுதிப்படுத்துகிறது.

"ஆம். தேவனுடைய பிள்ளைகள் அவரது சூளையில் சோதிக்கப்படுகிறார்கள்; முடிவுவரை சகிப்பார்கள் மும்மடங்கு சந்தோஷப்படுகிறார்கள்! ஆனால் கடுமையான சோதனையில் யார் நிலைக்கக்கூடும்? யார் சிலுலையிலிருந்து பரிசுத்தமாக வருவார்கள் யாருடைய அக்கினி கண்கள் முழுவதுமாக காண்கிறதோ, அவன் தனது உருவத்தை ஆத்துமாவில் காண்பான்."மறைந்து போகின்ற கண நேர பார்வையால் அல்ல, கண்ணாடியில் சுத்திகரிக்கப்படுபவரின் முகத்தை, ஆனால் பரலோக முத்திரை குத்தப்பட்ட இம்மானுயேலின் அம்சங்கள் சத்தியமும் கிருபையும நிறைந்து காணப்படும்; அந்த அன்பின் முத்திரையை சுற்றி நீதிவாக்கியம் 'ஒரு கணம் மட்டுமல்ல, ஆனால் நித்தியத்துக்கும்' காணப்படும்."

---------------------